செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம் : விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்- சாதாரண ஞு புரட்டாதி மீ ௩0உ வெள்ளிக்கிழமை (16-10-1970) [இல-உஅ

# தேசாபிமானி ஸ்ரீ இராமநாதன்

## அவர்களின் பெருஞ்செயல்

## பரமேசுவரக் கல்லூரி நிரந்தரஞாபகச்சின்னம்

## ஐம்பதாவது வருடம் செவ்வனேதொடங்குகிறது

கல்லூரி அதிபர், சிவஞானச் செல்வர்

**திரு. மு ஞானப்பிரகாசம் B A; B Sc அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் (1)**

வடக்கிலுள்ள மக்களின் ஏற்கனவே தேவைக்கு இயங்கும் கல்லூரிகளோடு, வடக்கிற் பல்கலைக் கழகத்திற்குக்கருவாகவமைவதாக ஒரு உன்னததாபனத்தின் அத்தியாவசியத்தை, ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் உணர்ந்தவர் சேர். இராமநாதன் அவர்களே. அவரமைத்த பெண்களுக்கான கல்லூரிக்குஇணையாக பிறிதோர் நிறுவனத்தைநிறுவ வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார் இப்பெருந் தலைவரின் மனத்தில் எண்ணங்கள் எண்ணங்களாகவே இருப்பதில்லை விரைவில் செயல்களாக மாறும். ஏனெனின் 1921 -ஆம் ஆண்டு நல்ல முகூர்த்தங்களில் பரமேசுவரக் கல்லூரி ஆரம்பமாயிற்று.

முன்னணியினின்ற இவ்வரசியலறிஞரின் தீர்க்கதரிசனத்தை, அவர் புதுக் கல்லூரிக்கென ஒதுக்கிய- தேர்ந்தெடுத்த -காணியின் இருப்பிடத்தைக் கொண்டே உய்த்தறிதல் கூடும். நகரத்தின் புழுதி நிறைந்த சூழ்நிலைகளினின்றும், கூச்சல்களினின்றும் அணித்தாகவில்லாது -நகரத்தின் எல்லையில் இயற்கை வழங்கொழிக்கும் செழுமையான, சுகந்தமான காற்று வீசா நிற்கும் கிராமப்புறத்தைப் பெருமகனார் இராமநாதன் தேர்ந்தனர். கோயில்களுக்கு மத்தியில், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அணித்தாக விருக்கும் அவ்விடத்தைக் கண்ணுக்கும் அகத்துக்கும் குளிர்ச்சி தருவதான அவ்விடத்தைத் திருநெல்வேலியென்றழையாநிற்பர். புனித தலங்களின் சுற்றுடலில் உயர்கல்வி போதிக்கப்பட வேண்டுமென்ற இலட்சிய நிலைக்கு ஓரிலக்கணமாக அவ்விடம்விளங்குகின்றது.

காணி தேர்ந்தெடுக்கப்பட்டமை ஒரு பெரிய வெற்றியாயிற்று. எதிர்காலப் பல்கலைக் கழகத்திற்கான அமைப்புத்திட்டம் தலையாயது. கட்டிடத்தின் ஒரு பகுதி 1921- ஆம் ஆண்டின் முற்பகுதியிற் பூர்த்தியாக, அதேவருடம் ஆவணி மாதத்தில் பாடசாலை — பரமேசுவரக்கல்லூரி — ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் குறிக்கோள் — சிகரத்தில்உள்ள "இலட்சியத்தால்' தென்னென வெளியாயிற்று:—

**"திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்"**

பாடசாலையின் ஆரம்பம் தலைவரின் முயற்சிக்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம் )

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

என்னில் யாருமெனக்
கினியாரில்லை
என்னிலு மினியானொருவ
னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப்புறம்
போந்துபுக்கு
என்னுளே நிற்கு மின்னம்ப
ரீசனே.

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசு சுவாமிகள்.

## தீபாவலித் திருநாள்

தீபாவலி இந்துக்களுடைய கொண்டாட்டங்களிலொன்று. தீபங்களின் நிரையென்று பொருள்படும். தீபங்களை நிரையாக ஏற்றி அவற்றுக்கு முன்பிருந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்து கோடி வஸ்திரம் அணிவது வழக்கம். கிருஷ்ண பரமாத்மாவானவர் நரகாசூரனென்ற அசுரனை வதைசெய்த பொழுது அவர் அவனுக்கு அநுக்கிரகஞ் செய்தார். அவன் இறந்த தினத்தில் பூமியிலுள்ள மக்கள் அப்பியங்க ஸ்நானஞ்செய்து கோடி வஸ்திரம் தரித்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்கின்றவர்களுக்கு இறைவன் அநுக்கிரகஞ் செய்வர்.

இத் தினத்தை மக்கள் புனிதமான முறையில் கொண்டாடுதல் வேண்டும். மதுபானம் அருந்துதல்; மாமிசம் புசித்தல் இப் புனித தினத்தில் தவிர்க்கப்படுதல் வேண்டும். அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் சித்திப்பதையே இத்தினம் குறிக்கின்றமையால் யாவரும் இவ்விழாவினை தவமுறையில் அநுட்டித்தல் வேண்டும். இத்தினத்தை மூடத்தன்மையினுல் மதுபானம் அருந்துவதிலும் மாமிசம் உண்பதிலும் கழிப்பது பெருந் தவறாகும். அங்ஙனம்செய்தல் குளிக்கப்போய்ச்சேறு பூசுவதையொக்கும். —

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

[அட்டன் மாநகர் ஹைலன்ஸ் கல்லூரி இந்து மாணவ மன்றத்தினர், ஷை கல்லூரி மண்டபத்தில் நடாத்திய கலைமகள் விழாவில், தலைவர் திரு. இர. சிவலிங்கம் (அதிபர்) அவர்கள் ஆற்றிய உரை]

"எண்களில் உயர்ந்த எண் ஒன்பது. தூய்மைக்கு நிறம் வெண்மை. எனவே நவராத்திரி ஒன்பது நாட்களிலும் சக்தி வழிபாடு சுத்தமான மனத்துடன் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகின்றது. வீரத்திற்காக முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்திற்காக இலக்குமியையும், இறுதி மூன்று நாட்கள் கல்வியை வேண்டிக் கலைமகளையும் பிரார்த்திக்கின்றோம்"

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க உப-தலைவர் திரு அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய சிறப்புச்சொற்பொழிவின்சாரம்:

"உயர்ந்த கொள்கைகளுடன் கூடிய மேலான பேறுகளைப் பரமனிடம் வேண்டுவதே தமிழன் பண்பாடு.

(வளர்ச்சி 2-ஆம் பகக்ம்)

## தருமபுர ஆதீனச் சமயப் பணிகள்

திருக்கயிலாயபரம்பரைத்திருத் தருமபுரம் ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், புரட்டாசித் திங்கள் 15-ம் நாள் முதல், ஆதீனத்திலுள்ள ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலில் "உலக நன்மைக்காக" 20-ஆவது சத சண்டி யக்ஞத்தை ஆதீனத்தின் ஆகமப்பாடசாலையின் முதல்வரான சிவாகம வித்துவான் "சிவாகம ரத்நாகரம்" சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்களைக்கொண்டு 9 நாட்கள் காலை மாலை இருவேளைகளிலும் சுவாசினீ, குமாரிவடுபூசை, சதுர் வேதபாராயணம், துர்க்கா சூக்த பாராயணம். திருமுறைப் பாராயணம். அபிராமி அந்தாதி பாராயணம், ஸ்ரீமகாலக்ஷ்மி, துர்க்கா தேவி இலக்ஷார்ச்சனை, ஸ்ரீ வித்யா சக்ரமாகிய மேருவிற்கு ஸகஸ்ரநாம அர்ச்சனை கொலு அலங்காரக் காட்சி இவைகளுடன் நடத்திவைத்து, சரஸ்வதி பூசை அன்று சப்தசதி ஹோமத்துடன் மகாபூர்ணாகுதி சதசண்டி ஹவன பூர்த்தியும்; அடுத்து 10-வது நாள் விஜய தசமியி

( வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## திருக்கேதீச்சரப் புராணம்

ஈழநாட்டில் தேவாரம்பாடம்பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரத் தலத்தினது வரலாற்றினையும் புகழினையும் விளக்கும் வகையில் அச்சுவேலி, சிவாகம ஞானபாநு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களுடைய திருக்குமாரன் கு. வைத்தீஸ்வரக் குருக்கள் "திருக்கேதீச்சரப் புராணம்" என்ற நாமத்தையுடைய ஒரு நூலை இயற்றியுள்ளார். திருவருளை முன்னிட்டு அந் நூலினை அச்சிட்டு சைவ உலகுக்கு வழங்கும் பணியை வேலணை திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலனசபை தொடங்கியிருக்கின்றது இந்நூல் விரைவில் வெளிவரும்.

மு. மயில்வாகனம்,
தலைவர்,

பொ. கேதாரநாதன்,
காரியதரிசி,

திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலனசபை, வேலணை. 16-10-70

### அகில இலங்கை இந்து மாமன்றம்

**புதுக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டுவிழா**

அகில இலங்கை இந்துகலாசார நிலையக் கட்டட அடிக்கல் நாட்டுவிழா 19-10-70 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொழும்பு மீசர். சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் (பார்சன் வீதி, லேக் கவுஸ் புத்தகசாலைக் கெதிராக) உள்ள காணியில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### சைவ மகாநாடு

கைதடி இந்து வாலிபர் சங்கத்தினது ஏழாவது சைவமகாநாடு கைதடி மூர்த்தியாவத்தை வீதியில் 4-11-70 தொடக்கம் 6-11-70 வரை நடைபெறும். சமயதீட்சை, திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள், சமய நாடகங்கள் இடம்பெறும் ——

### கொழும்பு, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

29-10-70 வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு உயர்திரு K. V. கணபதி அவர்கள் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனையும், இரவு 8-15 முதல் 8-30 வரை ஸ்கந்தஷஷ்டி விரதத்தின்மகிமையைப்பற்றி உயர்திரு. ப. கண பதிப்பிள்ளை அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும். மேற்படி சொற்பொழிவை பரப்புக் கூட்டதானம் அஞ் செய்யும். — —

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞூ புரட்டாதி மீ ௩0-உ வெள்ளிக்கிழமை [1970]

## இராமநாத வள்ளலின் கருத்து என்று நிறைவேறும்?

இற்றைப் பிரசுரத்தில் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி அதிபரினது பொன் விழா ஆரம்ப விரிவுரையின் சாரம் வெளிவருகின்றது. அதனை நிகழ்த்தியவர் சிவஞானச்செல்வர் திரு. மு. ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எஸ். ஸி அவர்களாவர். கல்லூரியைத் தாபித்த ஸ்ரீமான் ஸேர். பொன். இராமநாத வள்ளலுடைய ஈசுர பக்தி, பரோபகாரம், தவம், அரசியல் ஞானம், தத்துவ ஞானம் முதலிய நலன்களைப் பற்றியும் கல்லூரியைத் தாபித்த நோக்கத்தைப் பற்றியும், கல்லூரியில் கடமையாற்றிய அதிபர்கள், உதவியாசிரியர்கள் சிறப்பினைப் பற்றியும் பொழிப்பாகக் கூறியிருக்கின்றார். இப்பொன்விழா தொடர்ந்து ஒரு வருடகாலம் நடைபெறும். இலங்கை உயர்தர வித்தியாதிகாரி கலாநிதி உடுகமவும், கல்விப்பகுதி உயர்தர உத்தியோகத்தர் திரு. வர்ணசூரியாவும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்குச் சமுகமளித்தனர்.

அறிவு உலகில் விலைமதித்தற்கரிய பொருள.

"அறிவுடையா ரெல்லா முடைய ரறிவில்லா
ரென்னுடைய ரேனு மிலர்"

அறிவுடையவரிடத்தில் எல்லாமுண்டு. அறிவுள்ளவனுக்கு வறுமையும் செல்வமாகமாறும். ஆகையினாற்றான் அறிவுள்ளவனிடத்தில் எல்லாமுண்டெனத் திருவள்ளுவநாயனார் கூறினார். அறிவில்லாதவனிடத்தில் உள்ள செல்வமும் அவனுக்குத் துன்பத்தைத் தரும். அத்தகைய அறிவை மக்கள் பெறுவதற்கு இறைவன் திருவடி ஞானமே துணைபுரியும்.

அக்கருத்தை உளத்திற்கொண்டே ஸேர். பொன். இராமநாத வள்ளல் தாம 1921ஆம் ஆண்டு திருநெல்வேலியில் தாபித்த கல்லூரிக்கு பரமேஸ்வரக் கல்லூரி யென்ற திருநாமத்தைச் சூட்டினார்.

'செல்வன் கழலேத்துஞ் செல்வம்செல்வமே' என்றனர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். தாபகருடைய கல்வி ஞானத்தின் பெருமையை அவர் கல்லூரிக்குத் தெரிந்து கொண்ட இலட்சியமே வற்புறுத்தும்

"திரிகரண சுத்தியும் காரியசித்தியும் அருள்வாயாக"

அதிபர் அவர்கள் கூறியது போல ஸேர். பொன். இராமநாத வள்ளல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தொடங்கிய கல்விப் பணியை விருத்திசெய்யத் தோன்றியவர் சிவ சம்பந்தமான கல்வியேயூட்டப்பட வேண்டுமென்பதற்காகவே ஸேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பரமேஸ்வரக் கல்லூரி வளவிலும், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி வளவிலும் சிவாலயங்களை தாபித்துள்ளனர். தினமும் பிள்ளைகள் அங்கு வழிபாட்டுக்குச் செல்லுகின்றனர்.

ஸேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பரமேஸ்வரக் கல்லூரியை ஒரு சர்வகலாசாலையாக விஸ்தரிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அவருடைய காலத்தில் அந்நோக்கம் கைகூடவில்லை. பின்பு அவருடைய மருகர் கலாநிதி சு நடேசபிள்ளையவர்களும் அந்நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி புரிந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள சமயச் சபைகளும் பெரியார்களும் அரசாங்கத்தினிடம் காலத்துக்காலம் அதனை வற்புறுத்தித் தீர்மானங்கள் செய்தனுப்பினர். துரதிஷ்டமாக தமிழ் மக்களுக்கிடையிலுள்ள ஒற்றுமைக் குறைவினால் அப்பெருமுயற்சி தடைப்பட்டுவிட்டது. இனிமேலாகுதல் தமிழ மக்கள் ஒற்றுமையுடன் பணிபுரிந்து ஸேர். பொன்னம்பலம் இராமநாத வள்ளலுடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்வார்களாக.

### நாவலர் நல்வாக்கு

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம்
கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

## தேசாபிமானி இராமநாதன் அவர்களின்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

குப் பொருந்துவதாயமைந்தது. பாடசாலை யதிபர்களதும், உதவியாசிரியர்களதும் தேர்வு சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவையாகும். பேராசிரியர் M. V. மூர் (M. A.) முதலதிபரானார். இவர் கல்வித்துறையில் பெரிய விற்பன்னராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் மிகச்சிறந்த ஆசிரியர்களைக் கொண்டதாகக் கல்லூரியின் ஆசிரியர் குழாமிருந்தது. ஸ்ரீமான் S சிவபாதசுந்தரம்பிள்ளை B. A திரு T. சரவணமுத்து M A; M Se திரு. S. நடேசன் B A;B.L திரு. A. குமாரசாமி M. A. திரு. S சுப்பிரமணியம் B Sc முதலானோர் அக்குழாத்துட் சிலராவர்.

கல்லூரியின் சரித்திரத்திலதிபர்களாகக் கடமையாற்றியோரின் பெயர்களைக்கால வரிசையில் அன்று தொட்டு இன்று வரை கூறப்புகுவாம். பேராசிரியர் M. A. மூர் M A., சேர் A மகாதேவா M A., ஸ்ரீமான் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A., ஸ்ரீமான் S. நடேசன் B A; B L; ஸ்ரீமான் V. முத்துக்குமாரு M. A ஸ்ரீமான் S. சிவபாதசுந்தரம M. A; ஸ்ரீமான் M. ஞானப்பிரகாசம் B. A; B. Se., (தற்போதைய அதிபர்)

தற்போதைய அதிபர் ஸ்ரீமான் மு. ஞானப்பிரகாசம் ஸ்ரீமான் S. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்களின் சிஷ்யப்பிள்ளை போன்றவரும், கல்லூரியின் பழைய மாணவரும், ஸ்ரீமான் S நடேசனின் நம்பிக்கைக்குகந்தவருமாவர்.

ஈழ நாட்டின் அருந்தவப் புதல்வராம் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இவ்வரிய பரமேஸ்வராக் கல்லூரியின் பொன் விழாவுக்குத் தலைமை தாங்கும் பேறு எனக்குக் கிடைத்தமையையிட்டு யான் பெரிதும் பெருமிதமுறுகின்றேன். இன்று ஆரம்பித்து வைக்கப்படும் விழாவானது, ஒரு ஆண்டு காலம் நீடிப்பதாயும் - அக் காலத்தில் பிரதானமாக - சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் இராமநாதனம்மையார், Dr நடேசன் முதலியோர்கள் பற்றிய ஞாபகார்த்த விரிவுரைகள் நிகழ்த்தப் பெறும். இவர்கள் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக இந்நிறுவனத்தின் ஆக்கத்திற்கும், எழுச்சிக்கும் இடையறாதுழைத்தவர்களாவர். இவர்கள் நாட்டினது நன்மைக்குழைத்த தேசிய வீரர்களாவர். தேசியக் கல்வியின் ஆக்கத்திற்குப் பெரிதும் பாடுபட்ட முக்கியஸ்தர்களாவர்.

ஆழ்ந்த அறிவும், சிந்தனாசக்தியும் வாய்ந்த பெரியார் கலாநிதி உடுகம அவர்களையும் திரு. வர்ணசூரிய அவர்களையும் இவ்விழாவினை ஆரம்பித்து வைக்கஅழைத்துள்ளோம்.

எங்களது அழைப்பினை ஏற்றுக்கொண்டு இப்பெரியார்கள் இவ் விழாவிற் பங்குகொள்ளும் வண்ணம் வருகை தந்ததையிட்டுப் பெரிதும் நன்றியுடையவர்களாக விருக்கின்றோம்.

கல்வியின் பயன் — உயர்ந்த, புனிதமான நோக்கம் — பரமேசுவரனேயாவர்.

இன்று பாடசாலைக் கதவுகளைத் திறந்த பொழுது ஆண்டுகள் ஐம்பது கடந்துவிட்டது. பாடசாலைக்கு முதன் முதல் விண்ணப்பித்த மாணவர்களில் இருபத்தொருவர் தெற்கிலிருந்து வந்தவராவர். ஆக்ஸ்போர்ட்டுப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலக கலைப் புலவராகத் திகழ்ந்த (M. A. in English) திரு. M. G. மென்டிஸ் ஆங்கிலாசிரியராகக் கடமையாற்றினர். சேர். இராமநாதன் அவர்கள் ஆசிரியரை நியமிக்கும் பொழுது இன, சமய பாகுபாடு பார்த்ததில்லை. அவரிடம் குறுகிய மனப்பான்மை யிருந்ததில்லை; "யா (J) னஸ்" என்ற "டெயிலி நியூஸ்" புகழ்பெற்றகிருபர் திரு B. தனபால அவர்களும் பழைய மாணவர் குழாத்துள் ஒருவராவர்.

## சோர்க்கம என்பேம்



பக்தர்: "சேர். பொன். இராமநாதன்அவர்களையோ, சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளையவர்கள் போன்ற நமது நாட்டின் கண்களாக மிளிர்ந்தவர்களையோ போற்றும்பண்பும், அவர்தம் இலட்சியங்களைச் சிந்திக்கவேண்டும் என்கிற ஆர்வமும் இக்காலத்தவரிடம் அருகி வருகிறதே! காரணம் என்ன?"

சித்தர்: "சிறப்புவாய்ந்த தலைவர்களில்லாமையே இந்நிலைக்குக் காரணம்; நம் சாகியத்தை வழிநடத்திச்செல்லக்கூடிய தலைவரை வேண்டித் தவஞ்செய்ய வேண்டும்; எங்கள் செல்வப் புதல்வர்களை—தேசியவீரர்களை நாம் மறந்து வாழ்வது எம் துரதிர்ஷ்டமே! சேர். இராமநாத வள்ளலின் தொண்டினை நினைவூட்ட, அரசாங்கம் ஏன் ஒரு முத்திரை வெளியிடக்கூடாது? இதுபற்றி எவரும் ஏன் சிந்திக்கவில்லை? இது யாருக்குப்பெருமை?

"ஆற்ற லுள்ளவனைப்
போற்றமாட்டோம் – நல்ல
அறிஞனைக் கண்டாலோ
பேய னென்போம் –
சேற்றுக் கிடங்கினைச்
சோர்க்கம் என்போம் –
உண்மைச்
சோர்க்கத்தைக் கண்டாலோ
தூர நிற்போம்"

என்று கலிகாலப் புலவர்ஒருவர் பாடலுக்கு நம்முட் பலர் அமைவாகின்றோம்! இந்நிலைமாறாதோ?

"நாயன்மார் – நாதன்"

### உ
### நன்றியுரை நவிற்சி

அன்புடையீர்!

நான் எண்பத்தேட்டு ஆண்டு சென்ற ஒருவன் அன்பர்கள் பலர் ஆசி கூறி எழுதினர். நோயுற்று பல மாதங்கள் வருந்தினேன். எனக்குப் பொருளும் அரிய ஆறுதல் உரையும் அனுப்பினோருக்கு வணக்கம் கூறுகின்றேன். சுபம்.

பண்டிதர்
வ. மு. இரத்தினேஸ்வரன்
நீராவியடி. 12-10-70

[பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் பெரும் புலவர். சைவ சமயத்துக்கும் தமிழ்மொழிக்கும் அருந்தொண்டு புரிந்து வருகின்றவர். அவருடைய கடிதத்தை உவப்புடன் பிரசுரஞ் செய்கின்றோம். ஆண்டவன் அவருக்குஆறுதலான வாழ்வையளிப்பாராக. ப—ர்.]

## அணிந்துரை அரங்கம்

### ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தன் திருப்புகழ்

ஆக்கியோன்: 'அருட்கவி' சீ. விநாசித்தம்பி

பதிப்பித்தவர்:
மு பூபாலசிங்கம் J. P. அவர்கள்
திருநெல்வேலி—யாழ்ப்பாணம்.

இச்சிறுநூல் செல்வச்சந்நிதிக் கந்தன் பேரில், சங்கீத கதாப் பிரசங்க வித்துவான் சீ. விநாசித்தம்பி அவர்களால் பாடப்பெற்றது. இதனை ஓதுகின்றவர்களுக்கு முருகப்பெருமான் மீது பக்தி பெருகும். அவருடைய அருள் சித்திக்கும்.

## உள்ளுவதெல்லாம்...

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

சிவமும் சக்தியும் ஒன்றே சிவம் இன்றிச் சக்தி இல்லை. சக்தி இன்றிச் சிவமில்லை. "பெண்ணாகிய பெருமான்"! 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்று திருமுறைகள் கூறுகின்றன.

"..........யா அம் இரப்பது பொருளும் பொன்னும் போகமும் அல்ல அருளும் அன்பும் அறமும் மூன்றும்"

இவ்வடியால் பழந்தமிழர் நூலாகிய பரிபாடலில் செல்வத்தை வேண்டி இலக்குமிதேவியை வணங்குவதன் அர்த்தம் என்ன என்பது பற்றிச் சிந்தித்தல் பயன்தரும்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவரைப்பார்த்து இலட்சுமீகரமானவர் என்கிறோம். அவரது உடமைகளைக் கணக்கிடவில்லை. ஆடை ஆடம்பரங்களைக் குறிக்கவில்லை. அவரது முகத்தில் ஜொலிக்கும் செந்தளிப்பைக் கருதியே கூறுகிறோம். அத்தகைய செந்தளிப்பினால் தூய்மையினாலும் உள்ள நிறைவு தோன்றும். திருப்திதான் நிறைந்த செல்வம. உலகப் பொருட்களுக்காக இறைவனை வேண்டினால் அவர் நம்மைப் பார்த்துச் சிரிப்பார். கடவுள் உலகத்தில் உயிர்களைப் படைக்கையில் அவற்றிற்குத் தேவையான பொருள்களையும் படைத்துள்ளார். ஒவ்வொருவரும் தமது இருவினைகளுக்குத் தகுந்த போகப் பொருள்களைப் பெறுவார்கள்"

## தருமபுர ஆதீனச் சமயப் பணிகள்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

லன்று ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு யாககலசாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது 8கோடி 12வது லக்ஷார்ச்சனைபூர்த்திவிழாவும், 13வது லக்ஷலார்ச்சனை தொடக்க விழாவும்நடைபெற்று ஆராதனைகள் நடைபெற்றன ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் ஏராளமான ஆஸ்திக பெருமக்களுடன் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவியை தரிசனம்செய்துகொண்டார்கள், ஆதின கல்வி நிலையங்களில் கலைமகள் விழா 10 நாள் நடைபெற்றது.

தேவாரப் பாடசாலை

தருமை ஆதீனத்தில் தேவாரப் பாடசாலை ஆரம்பமானது முதல் இன்று வரை 30 ஆண்டு காலமாக திருமுறை ஆசிரியராக இருந்து வரும் திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள் இதுவரை சுமார் 125க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இறுதிநிலை வரை திருமுறைகளை பயிற்சிகொடுத்து வெளியில் அனுப்பி வைத்துள்ளார். அவர்களில் 100 மாணவர்கள் வரை திருமுறைவாணர்களாக பணியாற்றிக்கொண்டுவருகின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்க சிறப்பான பணியாகும்.

-(எமது சிதம்பரம் நிருபர்)

திரு. மா. பாலசுப்பிரமணியன்

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 10215

சின்னத்தம்பி சின்னக்குட்டி பெண் நாகமுத்து
கரணவாய் தெற்கு, —வழக்காளி

எதிராக

1. சிதம்பரி கணபதிப்பிள்ளை
2. பெண் கறுப்பி வரணி, இயற்றாலை
3. சின்னக்குட்டி சின்னத்தம்பி ஷெ —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோர்ட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1970ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ம் திகதி (25-11-70) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்க ளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப்பகுதி வரணி கோவிற்பற்று நாவற்காடு "மறவன்சாட்டி" இரண்டு பகுதி வி. பர. 19, 1/8 ஆனல் ஆட்சிப்படி வி. பர. 15 குளி 11 இதில் மேற்குப் புறமாக வி. பர. 7 குளி 14, 1/2 இதில் தெற்குப் புறமாக வி. பர. 2 எல்லை கிழக்கு கந்தன் சின்னத்தம்பிக் குரியவாதனம், வடக்கு நீக்கிவிடப்பட்ட சின்னக்குட்டி வேலுப்பிள்ளைக்குரிய பகுதி மேற்கு ஆறுமுகம் சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு பின்சாலும் சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்குரியவாதனம், இவ்வெல்லைகுட்பட்ட நிலம் முழுவதும் பயிர்பங்கு 1/2 வாசியும்

கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 300-00

2. ஷெ இறை "தச்சன்சா கிழக்கு"ம் மறு பிரிவுகளும், வி. பர. 60, 1/8 ஆட்சிப்படி 32 இதில் வட மேற்குப் புறமாக வி. பர. 4 எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக் குரிய ஆதனம், வடக்கு முன்சொல்லிய ஆதனம், மேற்கு ஆறுமுகம் சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம், தெற்கு கணபதி மகள் செல்லம்மாவுக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் முழுவதும் பயிர் பங்கு அரைவாசியும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 700/-

| | |
|---|---|
| | 700 00 |
| தீர்வைத்தொகை: | |
| ரூபா 500/-க்கு 30-9-68 தொடக்கம் 24-6-69 வரை 10 வீதப்படி | 37 50 |
| ரூபா 737-50க்கு 25-6-69 தொடக்கம் 1-9-1970 வரை (1வருஷம் 3மாதம்)5வீதவட்டி | 46 06 |
| செலவு — | 119 55 |
| மொத்தம் | 903 11 |

"சந்நிதி வேல்" கா. முத்துக்குமாருஐயர்
பருத்தித்துறை, கொமிசனரும விலைமதிப்பாளரும்
1-10-70 எம். 313. 16-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

சுன்னாகம், சூராவத்தை வாசிகள்
1. தங்கவேலு சோமசுந்தரமும் மனைவி
2. தனிகாதேவியும் —வழக்காளிகள்

இல: M B 11038 எதிராக

யாழ்ப்பாணம், நல்லூர். 69-ம் இலக்கம் கோவில் வீதி, வாசிகள்
1. முருகேசு சண்முகம் மனைவி
2. இரத்தினமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11038 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி (19 11—70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1705/-ம், 13-3-69 தொடக்கம் 8-1-70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 251 சதம் 50 அதாவது லற்றட்ட செலவு ரூபா 165 சதம் 75ம், வெலியாத்துச் செலவு ரூபா 45 சதம் 75ம். இனிமேல் வரும் செலவு 40/-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு டிவிசன் தெல்லிப்பளை கோவிற்பற்று ஊனி இறை வரிஓரவில்லும் குழுவதேவன் கூட்டி நிலப்பரப்பு 7 குழி 13 இதில் மேற்குப் பக்கமாக பிரிக்கப்பட்ட துண்டு பரப்பு நில இலாச்சம் 2 இந்த பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு இலாச்சம் 2ம் செய்பயிர் வான் பயிர்களும், புளியமரமும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லைகிழக்கு முருகேசு கைம்பெண் பாக்கியத்தினுடையதும், முருகேசுமகன் மனோன்மணியினுடைய ஆதனம், வடக்கு தங்கராசவும் மனைவி மனோன்மணி அவர்களின் ஆதனம், மேற்கு தங்கராசா மனைவி மனோன்மணி அவர்களின் உரிமையான ஒழுங்கை அவர்கள் காணிக்கு செல்வதற்கு. தெற்கு ஒழுங்கை

பதிவு இல: H. 348/186

107, பெரியதெரு, எ.பி.பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
8-10-70 எம், 311 16—10—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 10294

சின்னத்துரையின் கைம்பெண் வள்ளியம்மை, நீர்வேலி வடக்கு நீர்வேலி —வழக்காளி

எதிராக

1. சின்னத்துரை தர்மலிங்கமும்
2. பெண் பரமேஸ்வரி
இருவரும் நீர்வேலி வடக்கு நீர்வேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10294-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு கார்த்திகை மீ 1-ஆம் திகதி (1-11-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,868/- 13-9-69 தொடக்கம் 18-12-69 வரைக்கும் ரூபா 3,250-க்கு 6 வித வட்டியும் அதற்குப் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 277-90 சதம். குறைக்க வேண்டிய தொகை ரூபா 650/—

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "இலகொல்லை" நில பரப்பு நாலரை (4½) வீடும் செய்பயிர் வான் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு கந்தசாமி பெண் அன்னம்மாவின் ஆதனம், வடக்கு கைஒழுங்கை, மேற்கு சுப்பையா கதிரவேலுவின் ஆதனம் தெற்கு இணையதம்பி வல்லிபுரத்தின் உரிமையாளர்களின் ஆதனம் கிழக்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும்.

பதிவு K 207/212

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
22, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம், 20-9-70.
M 312 16—10—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ இல: M B 11104

வேலுப்பிள்ளை திருஞானசப்பந்தன், "ராங்வியூ" கொரேப் புத்தானை ரோட், வவுனியா தற்காலம் போஸ்ற் மாஸ்ரர், வண்ணார்பண்ணை: — வழக்காளி

எதிராக

1. தம்பிப்பிள்ளை சிவசங்கர நாதன் பெண்
2. விஜயலக்சுமி, சிவன்வீதி, உரும்பராய்கிழக்கு, உரும்பிராய். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் 11104- M. B. ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1970-ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 27-ஆம் திகதி வெள்ளிக்கிழமை (27-11-70) காலை 10-00 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:

முதலும் வட்டியும் ரூபா 3,823/- இன்னும் ரூபா 3,500/-க்கு 13-9-69 — 11-3-70 வரைக்கும் 9 வீத வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 11-3-70 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 327-10 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று ஊரெழு இறை "கீலப்பை" பர, நில லா. 36½. ஆனல் ஆட்சிப்படி பர. நில. லா- 40. இதில் வடக்குப் புறமாக பர. நில லா 15. இதில் கிழக்குப்புறமாக நிறுத்தமாய் பர நில லா 5 முழுக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் நூர்வையுருத்தும். செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை குட்டித்தம்பியினுருமைக்காரரினுதனம், வடக்கு நாகலிங்கம் பெண் சவுந்தரத்தினுதனம். மேற்கு கந்தையா பெண் தனலெட்சுமியினுதனம். தெற்கு அமிர்தநாயகம் கைம்பெண் சின்னத்தங்கத்திற்குரிய முழுக் காணியின் மிகுதி ஆதனம். இதடங்கலும்.

தா. க பொன்னுத்துரை J P
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"அகிலகம்" 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். 9-10-70
எம். 309 16-10-70.

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9026

1, செல்வவிநாயகம் வேல்முருகு, புலோலிகிழக்கு —வழக்காளி

எதிராக

1. ஜாக்கோவிசன்தி (மரணம் dead) 2. பெண் மரியாமதலேனு
3. கபிரியல் பத்திநாதர் 4. பிலிப்பு அந்தோனிப்பிள்ளை
5. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை எல்லாரும், புலோலி கிழக்கு —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி (23-11-70) திங்கட்கிழமை முற்பகல் 9-30மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று:-

1. புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை குசவன் தோட்டம் வி. பர. 10 குளி 3, 5/32 இது குறித்த பிரிவிடல் வழக்கோடு அணைக்கப்பட்டதும், உலாந்தா மேஸ்தர் வே, சிவரெத்தினத்தால் 1959ம் ஆண்டு தைமீ 11ம் திகதி 965-ம் இலக்கத்தில் விக்தாரிக்கப்பட்டதுமான படத்தின்படி இதில் குறித்த படத்தில் 1ம் நம்பர் துண்டுக்குக் குளி 5, 25/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2ம் நம்பர் துண்டு வடக்கு குறித்த படத்தில் 9-ம் நம்பர் துண்டு மேற்கு சுவாம்பிள்ளை பெண் பிரகாசம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு முருகப்பர் கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைகுட்பட்டவையடங்கலும் குறித்த படத்தில் 9ம் நம்பர் துண்டிலிதற்குப் பங்கும் (A 399/223) மதிப்பிட்ட விலை ரூபா 693-75)

2. ஷெ யிறை சியன் தோட்டமும் சியன் தோட்டம் தெற்கும் வி. பர. 12 குளி 1, 24/32 இது குறித்த 3612ம் இலக்கப் பிரிவிடல் வழக்கோடு அணைக்கப்பட்டதும் உலாந்த மேஸ்தர் வே சிவரத்தினத்தால் 1950-ம் ஆண்டு ஐப்பசிமீ 15-ம் திகதி 933-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமான படத்தின்படி இதில் குறித்த படத்தில் 8ம் நம்பர் துண்டுக்கு குளி 7, 25/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 4ம் நம்பர் துண்டு, வடக்கு குறித்த படத்தில் 7ம் நம்பர் துண்டு, மேற்கு கையொழுங்கை, தெற்கு குறித்த படத்தில் 9ம் நம்பர் துண்டு இவ்வெல்லைக்குட்பட்டவையடங்கலும் குறித்த படத்தில் 10ம் நம்பர் துண்டில் இதற்குரிய பங்கும். (A. 399/224) மதிப்பிட்ட விலை ரூபா 933-75

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை ரூபா | — — | 1000 00 |
| வட்டி ரூபா 500/-க்கு 12வீதப்படி 3-3-66 தொடக்கம் 10-1-68 வரை | | 110 00 |
| வட்டி ரூபா 1110/-க்கு 5 வீதப்படி 11-1-68 தொடக்கம் 1-9-70 வரை | | 148 00 |
| செலவு தொகை | — | 276 42 |
| மொத்தம் ரூபா | | 1534 4[illegible] |

சிவலிங்கநிலையம், க. நல்லலிங்கம்
வி. மூ. ரோட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்
பருத்தித்துறை, 8-10-70. எம். 307 16—10—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 10403 இலங்கை வங்கி —வழக்காளி

எதிராக

காரைநகர் K, ஆறுமுகம் செல்லையாபிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M. B. 10403 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதி (27-11-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 11 மணிக்கு இரண்டாம் காணியும் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 12,861-56ம் 25-8-1955 தொடக்கம் இறுபடும் வரைக்கும் 12,861-56ம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 1096-45, உயர்தர நீதிமன்றச் செலவு ரூபா 384-33, பிறிவிகவுன்சில் செலவு ரூபா 10281/-

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று தங்கோடை இறை "குறிஞ்சித்தாழ்வு நிலப்பரப்பு 28ம் வீடும் கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கார்த்திகேசு இராமலிங்கத்திற்கும் சுப்பிரமணியம் கைம்பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு நாகமுத்து ஆறுமுகத்திற்கும் கந்தையா கைம்பெண் வள்ளியம்மைக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கந்தையா சொக்கலிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்களும் தெற்கு விசுவநாதர் குமாரவேலுவின் ஆதனமும், காலஞ்சென்ற பொன்னையா பெண் வள்ளியம்மை உருத்தாளிகளுக்குமுரிய ஆதனங்களும். இதடங்கலும் விற்கப்படும்.

2. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று தங்கோடை இறை மாசியவளை நிலப்பரப்பு 25½ எல்லை கிழக்கு அருணாசலம் வேலுப்பிள்ளையின் ஆதனம், வடக்கு தெரு, மேற்கு ஒழுங்கையும், இராமநாதர் கந்தையாவின் ஆதனமும் தெற்கு இராமநாதர் கந்தையாவின் ஆதனமும், அருணாசலம் வேலுப்பிள்ளையினது ஆதனம், இதடங்கலும் விற்கப்படும்

ந. ஆறுமுகம்,
சித்தங்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
8-10-70. எம். 308 16-10-70. வெந்திஸ்மேஸ்தரும்.

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

ப்பாணம். அனலைதீவு வயித்தியநாதர் சுப்பையா மகள் மனோன்மணி —வழக்காளி

இல: M. B. 10839 எதிராக

லைதீவு (1) வேலாயுதம் கிருஷ்ணசாமியும் பெண்

(2 திருப்பதியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 10839ம் இலக்க ழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் வரிக்கப்படும் துண்டுக்காணியை 1970ம் ஆ கார்த்திகை மீ 4-ம் திகதி (14-11-70) சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 1885/- இதில் ரூபா 1000/-க்கும் 26-5-69 தொடக்கம 17-1-70 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 277-35 செலவழித்த செலவு ரூபா 176-35 வெலியாத்துச் செலவு ரூபா 54-75 எதிர்வரும் செலவு ரூபா 46-25

### ஆதன விபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப் பகுதி அனலைதீவு கோயிற்பற்று அனலைதீவு இறை 'சிலாவளுவடி" பா நி. 9 (ஒன்பது) இதில் மேற்குப் பக்கமாக பா. நி. 5 (ஐந்து) வீடும், செய்பயிர் வான்பயிர்களும் தெற்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றுப் பங்கும எல்லை கிழக்கு சண்முகம் கிருஷ்ணமூர்த்தியினு தனம். வடக்கு கையொழுங்கை. மேற்கு செல்லத்துரை பெண் இரத்தினத்திணு தனம், தெற்கு சின்னத்தம்பி நாகலிங்கத்துக்கும மறுபேருக்குமுரிய ஆதனம், இதடங்கலும் ஆனுல் இக்காணியின் மேற்குப் பக்கமாக வடக்கு ஒழுங்கையிலிருந்து தெற்குக் காணிக்கு போக்குவரத்துக்குரிய ஐந்தடி அகலமகொண்ட ஒழுங்கை நிலம் பிறநீங்கல்.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 25-9-70. — க சுப்பிரமணியப் கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

எம். 306 16-10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய். வீரகத்தி இரத்தினம் —வழக்காளி

வழ: இல. M B 8220 எதிராக

நவாலி செல்லப்பா தர்மகுலராசா, தற்போது படைசாலை ஆசிரியர், நெலுவர தோட்டம், பண்டாரவளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B 8220-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் திகதி (16-11-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5752-25 சதமும் 8-6-66 தொடக்கம் 20-12-66 வரைக்கும் ரூபா 3500/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 175/-ம் கட்டிட மீதி செலவு பணம் கழிக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை 'சடுவில் வளவு' (Chaduvil valavu) நெற்பரப்பு 13½ கல் விதைப்பும் மற்றும் கட்டடங்களும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு குலசேகரம்பிள்ளை பெண் அலங்காரத்துக்கும் குட்டித்தம்பி இரத்தினம் பெண் தையல்நாயகத்துக்குமுரிய ஆதனம், வடக்கு ஷை தையல்நாயகத்துக்கும் பங்காளர்களுக்கும் சமுவேல் சின்னப்பா பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனமும், ஒழுங்கை முடிப்புக் காலஞ்சென்ற சரவணமுத்து சுப்பிரமணியத்தின் உரிமையாளரின் ஆதனமும், மேற்கு ஷை சுப்பிரமணியத்தின் உரிமையாளரின் ஆதனமும், தெற்கு ஒழுங்கை இதடங்கலிலும் சேரியலாக மூன்றில் இரண்டு (2/3) பங்கு.

மல்லாகம். 8-10-70

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்.
உத்தரவுபெற்ற ஏலதாரர்.
Commisioner of Sales, & Auctioner & Values,
எம். 310 16—10-70

## கோட்டு விற்பனவு விளம்பரம

1. தம்பு துரைசாமி நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளி

இல: 6125/A எதிராக

1. ஆறுமுகம் வேலாயுதமும் பெண்
2. சின்னம்மாவும், புத்தூர் மேற்கு, புத்தூர். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் றிக்வெஸ்ற் கோட்டின் 6125/A ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும இரு துண்டுக்காணிகளை 1970ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் திகதி (16-11-70) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 507/-ம, 19-12-68 தொடக்கம் 19-6-69 வரைக்கும் ரூபா 300/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 52-25ம,

### ஆதன விபரம்

1. வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் இறை "ஏறந்தனை" நி பா 6 எல்லை கிழக்கு வயிரவன் வேலனுக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம், வடக்கு வட்டன் முருகனுக்கும் ...மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு முருகன் பெண் வயிரவி ...ன் ஆதனம, இலங்கப்பொடியன் பெண் நாச்சியின் ஆதனம், இவையடங்கலுள் சேரியலாய் (1/2) இரண்டில் ஒரு பங்கு

Regd K. 193/183

2. ஷை இறை "ஏறந்தனை" நி. பா. 2ம் பயிர்களும் எல்லை ...ழக்கு சிற்றம்பலம் சிவசப்புயின் உரிமையாளருக்குமுரிய ஆதனமும், ஒழுங்கையும, வடக்கு கதிரன் கைம்பெண் கதிரியின் ஆதனம். மேற்கு கந்தன் கைம்பெண் கதிட்டியின் ஆதனம், ...தெற்கு இலங்கப்பொடியன் பெண் நாச்சிக்கும் பங்காளிகளுக்கு...

# 3-ம் உலகத்தமிழ் மாநாடு

— தொகுத்தளித்தவர்: திரு. சூ. க. சுப்பிரமணியன் —

(முன்வளர்ச்சி — 2)

### கோவில்கள் ஆராய்ச்சி

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் உட்பட பல முன்னணிப் பல்கலைக் கழகங்கள் தமிழ்க்கோவில்கள் ஆராய்ச்சியில் நாட்டம் கொண்டுள்ளன. தமிழக அரசும் கோவில்கள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெறுவதற்கென விசேஷ ஊக்கம் அளிக்கின்றது. தொன்மையான நினைவுச் சின்னங்கள் தமிழ்மொழித் துறையுடன் இணைந்தவை. மாமல்லபுரத்தின் கற்சிற்பங்களும், கற்கோவில்களும் ஆகம காலத்தின் ஊடுருவல் தமிழ் கலாசாரத்தில் புகுந்து விட்டதை வெளிப்படுத்துகின்றன.

தமிழகமெங்கிலும் இருந்தும் சுமார் 25,000 கல் வெட்டுக்கள் ஆராயப்பட்டு இப்போது சுமார் 6000 கல் வெட்டுகள் அச்சில் வந்துள்ளன. இவையனைத்தும் தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கு மிகவும் பயன்படக் கூடியவை. ஹரப்பா ஆராய்ச்சிகள் திட்டவட்டமாக உறுதிப்படுத்துகின்றன ஒரு காலத்தில் திராவிட மொழியை அந்த நாகரீகத்தினர் பயன்படுத்தினர் என்பது ஆகும். இதை அறிஞர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். மதுரையில் சங்க காலத்தைப் பற்றியும் பிற்கால மன்னர்களைப் பற்றியும் அறியவேண்டுமென்ற நோக்கத்துடன் பல ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

திரு. ஆஸ்கோபொலா அவர்களின் உரையும் பின்னர் அங்கத்தினர்களுக்கென்ற தனி ஆராய்ச்சித் தொடர் ஒன்றும் நடை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். இல: 30 சப்பல தெரு, இறின்ரி துரைஐயா யோசுவா —வழக்காளி

வழ இல M B 9209 எதிராக

மண்டைதீவு யாழ்ப்பாணம். வயிரமுத்து சிவகுரு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 9209-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1970-ம் ஆ கார்த்திகை மாதம் 4-ம் திகதி (4-11-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முதலாம் காணியும், 11 மணிக்கு இரண்டாம் காணியும், 12 மணிக்கு மூன்றும் காணியும் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3425/-ம், 1-7-67 தொடக்கம் 26-6-68 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 375-06ம

### ஆதன விபரம்

1. வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டைதீவு இறை "பெரிய நஞ்சுதின்பான்" பா. நில. இலா. 8 குளி 6 கிணறும் இதற்கு எல்லை கிழக்கு கீழே காட்டிய இரண்டாவது காணியும், சின்னத்தம்பி சுப்பிரமணியத்திற்கும் சகோதரருக்குமுரிய ஆதனம்; வடக்கு கந்தவனம் பெண் சின்னனுக்கும் மற்றவர்களுககுமுரிய ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்கும் சிவலிங்கம்பிள்ளை பெண் பூமணியின் உரிமையாளருக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கீழே காட்டிய மூன்றுவது காணி, இதடங்கலும் சேரியலாக பா. நி. இலா. 5 இதில் சேரியலாக பா. நில. இலா. ½லும் அதைச் சேர்ந்தவைகளும்,

2 மேற்படி இறை 'பெரிய நஞ்சுதின்பானுக்கு கிழக்கு' பா. நில. இலா. 4 இதில் மேற்குப் பக்கமாக பா. நில. இலா. 3 கிணறும் இதற்கு எல்லை கிழக்கு குமாரவேலு இளையதம்பியின் உரிமையாளரின் ஆதனம், வடக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்திற்கும் சகோதரருக்குமுரிய ஆதனமும், மேற்கு முதலாம் காணியும் தெற்கு விநாசித்தம்பி வேலுப்பிள்ளைக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். இதடங்கலும் சேரியலாக ½ பங்கு நீங்கலாக மிகுதியாகவுள்ள முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும்.

3 மேற்படி இறை 'நஞ்சுதின்பானுக்கு தெற்கு' பா. நில. இலா. 63½ பனைகள் முதியதும் இளையதும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு அரசாங்கத்திற்கு சேர்மதியானவைகளும் ஆறுமுகம் நாகலிங்கத்தின் உரிமையாளருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு மேலே குறிப்பிட்ட முதலாம் காணியும் மற்றவர்களின் காணியும் மேற்கு சின்னையா பெண் தில்லைவனத்தின் உரிமையாளருக்குரிய ஆதனங்கள். தெற்கு கடற்கரை. இதடங்கலும் பா. நில. இலா. 12 இல் ½ பங்கு நீங்கலாக மிகுதியாகவுள்ள முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும்.

20, பெருமாள்கோவில் வடக்கு ஒழுங்கை. யாழ்ப்பாணம். 2-10-70

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 315 16-10-70

முரிய ஆதனம், இவையடங்கலுள் சேரியலாய் (¼) நாலில் ஒரு பங்கு.

Regd K 195/184

காரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை 5-10-70

J. A. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 305 16—10—70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 16—10—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் • திரு மு. மயில்வாகனம் அவர்கள்

## வேலை வழங்குக

வேலையில்லாதிருக்கும் பண்டிதர்களுக்கும் வித்துவான்களுக்கும் புலவர்களுக்கும் இசையாசிரியர்களுக்கும் உடனடியாக வேலை வழங்க ஏற்பாடுகள் புரியும் வண்ணம் தேசிய ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சருக்கு ஒரு தீர்மானத்தை அனுப்பியுள்ளது. இவர்களுக்கு அதே தகுதியுள்ள சிங்கள ஆசிரியர்களுக்கு உதவப்படும் சம்பளத்தை உதவுமாறும் தீர்மானத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

பெற்றது.

### சங்க இலக்கியங்கள்:

பேராசிரியர் குயுட்பியர் அவர்களின தலைமையின்கீழ் நடைபெற்ற சங்க இலக்கியங்கள் பற்றிய தொடர் சங்ககால நூல்களினுல தமிழர் பண்பாடு, வரலாறு எங்ஙனம் தெரியவருகிறது என்பதை அறியப் பெரிதும் பயன்பட்டது. கேரளா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு. சுப்பிரமணியத்தின் ஆராய்ச்சித் தொகுப்பின் சுருக்கம் பின்வருமாறு.

சங்க இலக்கியங்கள் பக்திக் காலத்திற்கு முற்பட்டவையென்பது அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை. சங்க இலக்கியங்களில் அடங்குபவை பத்துப்பாட்டு. பதிற்றுப்பத்து புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல், பதினெண் கீழ்க்கணக்கு முதலியன. காவியங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலை முத்தொள்ளாயிரமும் இன்னும் பல நூல்கள் சங்க நூல்களில் அடங்கும் இலக்கண நூலான தொல்காப்பியம் சங்க காலத்திற்கு முற்பட்டதாகும். அதன் காலம் கி மு. 1700 முதல் கி. பி. 200க்குள் இருக்க வேண்டும் என்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். தமிழின் தற்போதைய எழுத்துக்கள் பழக்கத்தில் வருவதற்கு முன்பு பிராமி எழுத்துக்கள் பழக்கத்தில் இருந்து வந்தன. கி. பி. ஆறும் நூற்றுண்டைச் சார்ந்த ரோம, கிரேக்க நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன,

— 'லண்டன் முரசு' (1970)

(வளரும்)

வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின்

## புதிய நிர்வாக சபை

12-10-70 திங்கட்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வலி கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் 27-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின் வருவோர் உத்தியோகத்தர்களாகவும் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் ஏகமனதாகத்தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

தலைவர் திரு க, இ. குமாரசாமி, காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம், தனுதிகாரி திரு. த, மயில்வாகனம். உப தலைவர்கள்: திருவாளர்கள்: க, மார்க்கண்டு, சி, சிவசம்பு, பொ. வேலும்மயிலும், உபகாரியதரிசி திரு. ம. க. நடராசா.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:

திருவாளர்கள்: த சுப்பிரமணியம், பொ. இ. திருமேனி, ஜே. ஐ. தம்பியையா, சி, க. சுப்பிரமணியம், மூ. நல்லையா, எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். வி. வேலுப்பிள்ளை ம, பிலிப்புப் பிள்ளை, இ. துரைசிங்கம், திருமதி வேதவல்லி கந்தையா.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் திரு. நா. இராசையா அவர்கள் எண்பார்வையாளராகத் தெரிவு செய்யப்பெற்றூர். ந. கி.